Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்

PRGI NO: TNBIL/25/A3556

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 016 | வியாழக்கிழமை Thursday | 16.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# ‘தென் மாநிலங்களுக்கு மாபெரும் வரலாற்று அநீதி’ கருப்புக் கொடி போராட்டம்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



சென்னை: "மத்திய அரசு கொண்டுவரவுள்ள தொகுதி மறுவரையறை திருத்த மசோதா, தென்மாநிலங்களுக்கும் இழைக்கப்படும் மாபெரும் வரலாற்று அநீதி. இதற்கு எதிராக, தமிழ்நாடு முழுவதும் வீடுகளிலும், பொது இடங்களிலும் கருப்புக் கொடி ஏற்றும் போராட்டம் (ஏப்.16) நடக்கும்." என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "இந்தியாவின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட குற்றத்துக்காக தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களுக்குத் தண்டனையா?

ஒன்றிய பாஜக அரசு நாளை நாடாளுமன்றத்தில் கொண்டுவரவுள்ள தொகுதி மறுவரையறை சட்டத் திருத்தம் தமிழ்நாட்டுக்கும், தென் மாநிலங்களுக்கும் இழைக்கப்படும் "மாபெரும் வரலாற்று அநீதி".

விந்திய மலைக்குத் தெற்கே உள்ள தென்னிந்தியர் ஒவ்வொருவரும் கொதித்துப் போயிருக்கிறோம். நெருப்போடு விளையாடுகிறது பாஜக. தொகுதி மறுவரையறைக்கு எதிராகத் தமிழ்நாடு முழுவதும் வீடுகளிலும், பொது இடங்களிலும் கருப்புக் கொடி ஏற்றும் போராட்டம் நாளை நடக்கும். தமிழ்நாட்டின் குரலை மதித்து ஒன்றிய அரசு பின்வாங்கவில்லை என்றால், அதற்கான விளைவுகளை நீங்கள் சந்திக்க வேண்டி இருக்கும். இதற்காக, மிகப்பெரியவிலையை நீங்கள் கொடுக்க வேண்டி இருக்கும்! தி.மு.க. தலைவராக, அனைத்துக்கும் மேல் சுயமரியாதை யுள்ள தமிழனாக மீண்டும் எச்சரிக்கிறேன்!" என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். பின்னர் மற்றொரு பதிவில், "நாடு முழுக்க உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒருங்கிணைத்து இந்த பேராபத்தை எதிர்கொள்வதற்கான வியூகங்கள் குறித்து திமுக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசித்துள்ளேன்.

தனிப்பட்ட மனிதர்கள் – அரசியல் இயக்கங்களைவிட, மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதுதான் நமது தலையாய கடமை. எனவே, அனைத்து அரசியல் இயக்கங்களைச் சார்ந்த தோழர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனநாயகத்தைக்காக்கஓரணியில் திரள வேண்டும்" என அழைக்கிறேன்" என்று முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழக சட்டமன்றத் தேர்தல் 2026: நாகர்கோவிலில் பிரதமர் மோடி ரோடு ஷோ



சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் 23 ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது. அதனால், அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் திமுக, அதிமுக, நாதக, தவெக போன்ற அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தங்களது கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வரிசையில், தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து, பிரச்சாரம் மேற்கொள்ள பிரதமர் மோடி இன்று (ஏப்.15) நாகர்கோவிலுக்கு வருகை தந்துள்ளார். இதற்காக, டெல்லியிலிருந்து புறப்பட்ட அவர் விமான மூலம் கேரளம் மாநிலம் திருவனந்தபுரத்திற்கு வந்து, அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் நாகர்கோவில் மறவன் குடியிருப்பு பகுதியில் உள்ள ஏர்காம்ப்ஹெலிகாப்டர் தளத்திற்கு வந்தடைந்தார். பின்னர், வேப்பமூடு பகுதியில் இருந்துபிரதமர்மோடியின் ரோடு ஷோ ஆரம்பமாகிறது. தொடர்ந்து, நாகர்கோவில் மாநகரின் முக்கிய சாலைகளான செட்டிக்குளம், வேப்பமூடு சந்திப்பு, மணிமேடை சந்திப்பு, வடசேரி வரை தேர்தல் பிரச்சாரம் செய்தார். குறிப்பாகபாஜக60க்கும் மேற்பட்ட இடங்கள் கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது இந்த நிலையில், அதிமுக பாஜகவுக்கு ஒதுக்கிய தொகுதிகளில் சில அதிமுகவின் பலபொருந்தியதொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. பாஜக பயன்படுத்திக் கொண்டு அந்த தொகுதியில் வெற்றி வாய்ப்பு கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பு ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில், தேர்தல் காலங்களில் பிரதமர் மோடி தமிழ்நாட்டிற்கு அதிக முறை வருகை தருவது என்று ஆனால் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டு பின்பு இரண்டு முறை மட்டுமே வருகை தந்தார். அதன் பிறகு அவர் வருகை தரவில்லை. இது குறித்து அரசியல் வட்டாரத்தில் கேட்டபோது அசாம் மற்றும் கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் தேர்தல் முன்னதாகவே நடைபெற்றது.

# தி.மு.க. ஆட்சியில் கல்லூரி மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் பாதுகாப்பு இல்லை; எடப்பாடி பழனிசாமி கண்டனம்



சென்னை: மீஞ்சூர் அருகே வீட்டில் தனியாக இருந்த கல்லூரி மாணவி தாக்கப்பட்ட சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ள அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "இத்தனை நாட்கள் தேர்தல் பிரச்சாரம் செய்த ஸ்டாலின், தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பு கேள்விக்குறி ஆகியுள்ளதைபற்றிஒருவார்த்தை, ஒரே ஒரு வார்த்தை பேசினாரா?" என்று வினவியுள்ளார்.

இது தொடர்பாக இபிஎஸ் தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் அருகே வீட்டில் தனியாக இருந்த கல்லூரி மாணவியை குறிவைத்து கஞ்சா போதையில் இருந்த இளைஞர்கள் பாலியல் அத்துமீறலில் ஈடுபட முயன்று, பாதிக்கபட்ட மாணவி மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியதில் மாணவி உயிருக்குபோராடிவருவதாக வரும் செய்தி மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது.

இந்த கொடூரக் குற்றத்தில் ஈடுபட்ட அனைவர் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல்துறை அதிகாரிகளை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கஞ்சா போதை, பாலியல் வன்கொடுமை, கொலை முயற்சி இது தான் திமுக ஆட்சிக் காலம்.

படிக்கும் கனவுகளோடு இருந்த மாணவியை, ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராட வைத்திருப்பது தான் ஸ்டாலின் மாடல். இந்த மாடல் தான் மீண்டும் வரவேண்டும் என்று ஸ்டாலின் துடித்துக்கொண்டு இருக்கிறார்.

நான் ஒன்றே ஒன்று கேட்கிறேன்– இத்தனை நாட்கள் தேர்தல் பிரச்சாரம் செய்த ஸ்டாலின், தமிழ்நாட்டில் பெண்கள் பாதுகாப்பு கேள்விக்குறி ஆகியுள்ளதை பற்றி ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை பேசினாரா?

தன் ஆட்சிக்கான பொறுப்பு இல்லாத, என்ன நடக்கிறது என்று சிந்தனையே இல்லாத ஒரு டம்மி முதல்வர் தமிழ்நாட்டை ஆண்டது போதும். ஏப்ரல் 23அன்று நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலுக்கான கேள்வி ஒன்று ஒன்று தான். தமிழகம் வாழ வேண்டுமா? ஆம் என்றால், திமுக "வீழ்ந்தே ஆகவேண்டும்!" என்று பதிவிட்டுள்ளார்.

அடுத்து மலரப்போகும் ஆட்சியில்...

அதிமுக கூட்டணியில் உள்ள அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், "தலைநகர் சென்னை தொடங்கி கடைக்கோடி கிராமங்கள் வரை கட்டுப்படுத்தவே முடியாத அளவிற்கு புரையோடிப் போயிருக்கும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களால் சாலைகள், பேருந்து, ரயில் நிலையங்கள், விமானங்களை தொடர்ந்து தன்னுடைய சொந்த வீட்டில் கூட பாதுகாப்பாக இருக்க முடியாத சூழல் தமிழக மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பள்ளி, கல்லூரி மாணவர்களை குறிவைத்து விற்பனை செய்யப்படும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களால் அவர்களின் எதிர்காலம் வீணாவதோடு, அந்த கொடியவகைப்போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களால் அரங்கேற்றப்படும் கொலை, கொள்ளைகளும், பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்களும் சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளின் அடையாளமாக தமிழகத்தை மாற்றிவிட்டன.

எனவே, கல்லூரி மாணவி மீது கண்மூடித்தனமான தாக்குதலில் ஈடுபட்ட அனைவரின் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல்துறையினரை வலியுறுத்தும் அதே நேரத்தில், தமிழகத்தில் அடுத்து மலரப்போகும் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆட்சி அனைத்து தரப்பு மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்யும் என்ற உத்தரவாதத்தை மக்களிடம் அளிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

## ஏறுமுகத்தில் தங்கம்; சவரனுக்கு ரூ.800 உயர்வு



சென்னை: சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை (ஏப்ரல் 15) சவரனுக்கு ரூ.800 அதிகரித்து, ரூ.1,14,560–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

மேற்காசிய போர் காரணமாக தங்கம் விலை குறைந்து வந்த நிலையில், தற்போது மீண்டும் படிப்படியாக அதிகரித்து வருகிறது. அமெரிக்கா – ஈரான் இடையேயான போர் எதிரொலியாக ஹோர்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதால், கச்சா எண்ணெய்யின் விலை அதிகரித்தது. எரிப்பொருள் மீதான முதலீடு அதிகரிப்பு, அமெரிக்கா டாலர் விலை மாற்றம் உள்ளிட்டவையின் காரணத்தினால் தங்கம் விலை ஏற்ற இறக்கமாக இருந்து வந்தது.

இந்நிலையில், போர் நிறுத்த பேச்சு வார்த்தைக்கு மத்தியில் தங்கம் விலை அதிகரிக்க தொடங்கியுள்ளது. ஏப்ரல் 8 முதல் தங்கம் ஒரு கிராமுக்கு ரூ.14 ஆயிரத்தைக் கடந்த நிலையில், இன்று ஒரு கிராம் ரூ.14,320–க்கு விற்பனை செய்யப்படுகிறது. மீண்டும் தங்கம் விலை அதிகரிக்க தொடங்கியது நகை பிரியர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(ஏப்ரல் 15) புதன்கிழமை, தங்கம் விலை சவரனுக்கு ரூ.800 அதிகரித்து, ரூ.1,14,560–க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதே போன்று, நேற்று ஒரு கிராம் தங்கம் ரூ.14,220–க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில, இன்று ரூ.100 அதிகரித்து, ரூ.14,320–க்கு விற்பனை செய்யப்படுகிறது. மூன்று நாட்களாக தொடர்ச்சியாக தங்கத்தின் விலை ஏற்றத்துடன் காணப்படுகிறது.

வெள்ளி விலை நேற்று ஒரு கிராம் ரூ.265–க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில், இன்று ரூ.10 அதிகரித்து ஒரு கிராம் ரூ.275–க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதே போல, கிலோவுக்கு ரூ.10,000 அதிகரித்து ரூ.2,75,000–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

**செய்திகள் உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



சேலம் மாவட்டம் ஓமலூர் சட்டமன்றத் தொகுதி த.வெ.க வேட்பாளர் அதியமான் ஓமலூர் சட்டமன்ற தொகுதி காடையாம்பட்டி ஒன்றியம் பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது பொதுமக்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். இதனை தொடர்ந்து அவர் பேசுகியில் தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை தளபதி விஜய் ஆட்சி அமைந்த உடன் பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் மாதம் 2500 உரிமைமைத்தொகை, போதைப்பொருள் இல்லாத தமிழகத்தை உருவாக்குவோம் என்று பேசினார்.

# “நிழல் மறைந்த நாள்; தேவகோட்டை மாணவர்கள் பொதுமக்களுக்கு அறிவியல் விழிப்புணர்வு”



தேவகோட்டை : சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை பகுதியில் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி மாணவர்கள் பொதுமக்களுக்கு அறிவியல் விழிப்புணர்வு ஏற்படுத்திய நிகழ்வு பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. "பூஜ்ஜிய நிழல் தினம்" எனப்படும் அரிய இயற்கை நிகழ்வை மாணவர்கள் தங்கள் வீடுகளிலிருந்தபடியே அனுபவித்து, அதன் அறிவியல்பின்னணியை பொதுமக்களிடம் எடுத்துரைத்தனர்.

நாம் திறந்த வெளியில் நின்றபோது சூரியன் நேராகமேலிருந்துகதிர்களை வீசுவதால், நமது நிழல்பக்கங்களில்தெரியாமல்பாதங்களின்கீழே மறைந்துவிடும். இந்த அபூர்வமான காட்சியை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆச்சரியத்துடன் கவனித்தனர்.

தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளிமாணவர்கள், தங்கள் சுற்றுப்புற மக்களிடம் இந்த நிகழ்வின் அறிவியல் காரணங்களை தெளிவாக விளக்கினர். பள்ளி தலைமையாசிரியர் லெ. சொக்கலிங்கம் மற்றும் ஆசிரியைகள் முத்துலெட்சுமி, முத்துமீனாள் ஆகியோர் வழங்கிய தகவலின்படி, "பூஜ்ஜிய நிழல் தினம் ஆண்டிற்கு இருமுறை நிகழ்கிறது. சூரியன் நேராக மேல் நிலைக்கு (அட்சரேகைக்கு சமமாக)வரும்போது,அதன் கதிர்கள் பொருட்களின் மீது செங்குத்தாக விழுவதால் நிழல் காணாமல் போகிறது. இந்த நிகழ்வு ஒவ்வொரு பகுதிக்கும் வேறுபட்ட நாட்களில் நிகழும்" என்று மாணவர்கள் விளக்கினர்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், மாணவிகள் ரித்திகா, நந்தனா, மற்றும் மாணவர்கள் அஜய், மோனிகா, விஜய், முகிலன், லேகாஸ்ரீ, ஸ்டெபி ஆகியோர் தங்கள் வீடுகளின் அருகில் உருளை வடிவ பொருட்களை வைத்து சோதனை செய்து பார்த்தனர். அப்போது, தங்களின் நிழல்பக்கங்களில்தெரியாமல் மறைந்ததை கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்தனர்.

இந்த அனுபவத்தை அவர்கள் தங்களுடன் படிக்கும் நண்பர்களுக்கும், பெற்றோர்களுக்கும், அருகிலுள்ள பொதுமக்களுக்கும் நேரடியாகசெய்துகாட்டி, அறிவியல் உண்மைகளை எளிமையாக விளக்கினர்.

இந்நிகழ்வு மூலம், மாணவர்கள் விடுமுறை காலத்திலும் அறிவியல் மீது ஆர்வம் காட்டி,சமூகத்தில் அறிவியல் விழிப்புணர்வு ஏற்படுத்தியமை பாராட்டத்தக்கதாகும். இதற்கான ஏற்பாடுகளை ஆசிரியை வள்ளிமயில் செய்து இருந்தார் .

# பாகிஸ்தான் மருத்துவமனையில் ஊசியை மீண்டும் பயன்படுத்தியதால் 331 குழந்தைகளுக்கு எச்ஐவி தொற்று







இஸ்லாமாபாத்:பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலம் தவுன்சா நகரில் அரசு வட்டார மருத்துவ மனை உள்ளது. இதில் 'பிபிசி நியூஸ்' நடத்திய ஒரு ரகசிய ஆய்வில் குழந்தைகளுக்கு ஊசிகளை மீண்டும் மீண்டும் பயன்படுத்துதல், ஒரே மருத்துவ சாதனத்தை பல நோயாளிகளுக்கு பயன்படுத்துதல் என பல் வேறுபாதுகாப்பற்றநடைமுறைகளை அம்பலப் படுத்தியுள்ளது. இதுவே எச்ஐவி பரவலுக்கும் வழி வகுத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

தவுன் சாவில் 8 வயது சிறுவன் எச்ஐவி தொற்று உறுதி செய்யப்பட்ட சிறிது நேரத்திலேயே உயிரிழந்தான். இறுதி நாட்களில்,அவன் அனுப வித்த தீவிர துன்பத்தை சிறுவனின் தாயார் நினைவு கூர்ந்தார். சிறுவனுக்கு எச்ஐவி இருப்பது கண்டறியப்பட்ட சிறிது காலத்திலேயே, அவன் சகோதரி அஸ்மாவுக்கும்தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இந்த மருத்துவமனையில் வழக்கமான சிகிச்சையின் போது செலுத்தப் பட்ட அசுத்தமான ஊசிகள் மூலம் இரு குழந்தைகளுக்கும் வைரஸ்தொற்று ஏற்பட்டதாக அவர்களது குடும்பத்தினர் நம்புகின்றனர். 2024-ம் ஆண்டின் பிற் பகுதியில், உள்ளூர் மருத்துவர் குல் கைஸ்ரானி தனது மருத்துவ மனைக்கு வரும் குழந்தைகளிடையே எச்ஐவி பாதிப்புகள் வழக்கத்துக்கு மாறாக அதிகரித்ததை கவனித்தபோது இந்த தொற்றுப் பரவல் முதன் முதலில் வெளிச்சத்துக்கு வந்தது.

பிபிசி நடத்திய புலனாய் வில் 2024 நவம்பர் முதல் 2025 அக்டோபர் வரையிலான காலகட்டத்தில்,தவுன்சாவில்குறைந்தது 331 குழந்தைகளுக்கு எச்ஐவி தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இந்தத் தொற்றுகளில் பல பாதுகாப்பற்ற ஊசி போடும் முறைகளுடன் தொடர்புடையதாகஇருக்கலாம் என்று சான்றுகள் தெரிவிக்கின்றன. இதனிடையே,தங்கள் மீதான புகார்களை மருத்துவ மனை அதிகாரிகள் மறுத்துள்ளனர்.



# கோவையின் உயிர்நாடியான நொய்யல் நதி புனரமைப்பை மேம்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்

## சிறுதுளி அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நீர்வள மேலாண்மையில் தொடர்ந்து செயல்பட்டு வரும்சிறுதுளி அமைப்பு, நொய்யல் நதி மற்றும் அதனை சார்ந்த நீர்நிலைகளைபுனரமைக்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள வெள்ளியங்கிரி மலை பகுதியில்தோன்றிசுமார் 170கி.மீ.நீளத்தில் பாயும் நொய்யல் நதி, கோயம்புத்தூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயம், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுச்சூழல் சமநிலைக்கு முக்கிய ஆதாரமாக விளங்கி வருகிறது. மாசுபாடு, ஆக்கிரமிப்பு மற்றும் நீரோட்டக் குறைவு போன்ற சவால்கள் காரணமாக பாதிக்கப்பட்ட நொய்யல் நதியை மீட்டெடுக்க கடந்த 23 ஆண்டுகளாக சிறுதுளிஒருங்கிணைந்த அணுகுமுறையில் செயல்பட்டு வருகிறது. நதி, நீரோடைகள், தடுப்பணைகள் மற்றும்பாசன வாய்க்கால்களை இணைத்து புனரமைக்கும் இந்த முயற்சிகள் மூலம் சாடிவயல், மசோரம்பு நீரோடை,முண்டந்துறை, புதுக்காடு மற்றும் குனியமுத்தூர் அணைகள் உள்ளிட்ட பல இடங்களில் நீர் சேமிப்பு திறன் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் மேம்பட்டு, ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெற்று வருகின்றன.

பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் "நொய்யல் ஆற்றில் நடைபயணம்" நிகழ்ச்சி பேரூர் படித்துறை முதல் குறிச்சி அணைக்கட்டு வரை நடைபெற்றது. இதில் சிறுதுளி அமைப்பின் நிர்வாக அறங்காவலர் வனிதா மோகன், பேரூர் ஆதீனம், நீர்வளத்துறை, தொழில்துறையினர் கொடிசியா , சீமா , யங் இந்தியன்ஸ் , விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பேசிய வனிதா மோகன் கூறியதாவது.

"நொய்யல் நதி கொங்கு மண்டலத்தின் உயிர்நாடி. அதை பாதுகாப்பதும், புனரமைப்பதும் அரசு மட்டும் செய்ய வேண்டிய பணி அல்ல; பொதுமக்கள், நிறுவனங்கள் மற்றும் அனைத்து தரப்பினரும் இணைந்து செயல்பட்டால்தான் நீடித்த மாற்றத்தை உருவாக்க முடியும்" என்றார். மேலும், "நல்லதண்ணி திட்டத்தின் மூலம் இயற்கை அடிப்படையிலான முறைகள் பயன்படுத்தி நீர் தரத்தை மேம்படுத்தும் பணிகள் கோவையின்பலபகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வெட்டிவேர், தாவரங்கள் மற்றும் உயிரியல் வடிகட்டல் முறைகள் மூலம் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு நீர்நிலைகளில் சேர்க்கப்படுகிறது. நாளொன்றுக்கு உருவாகும் அதிகளவான கழிவுநீரை கட்டுப்படுத்தி, நதிகளில் மாசுபாட்டை குறைப்பதில் இத்திட்டம் முக்கிய பங்காற்றுகிறது என தெரிவித்ததுடன்,

நொய்யல் நதியை பாதுகாக்க பொதுமக்கள், நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகள் இணைந்து செயல்பட வேண்டும் என கூறினார்.

# தமிழக பாரதிய ஜனதா துணைத்தலைவர் நடிகை குஷ்பூ மதுரை விமான நிலையத்தில் பேட்டி

பீகார் உத்திரபிரதேசம் உத்தரகாண்ட் போன்ற மாநிலங்களில் அலசித் திட்டங்கள் எதுவுமே செயல்படாத நிலை குறித்த கேள்விக்கு



அங்கு போய் நீங்க நேரில் சென்று பார்த்தீர்களா அங்குள்ள நிலைமை எவ்வளவு வளர்ச்சி அடைந்துள்ளது என்று தெரியும்

மதுரை மத்திய தொகுதி வேட்பாளர் சுந்தர் சி குறித்து தனிப்பட்ட விமர்சனம் கேள்விக்கு

நானும் சுந்தர் சி யும் தனிப்பட்ட முறையில் யாரையும் விமர்சனம் செய்யவில்லை நான் குறைவாகவே படித்துள்ளேன்எனதுஅனைவரும் குறைவாக படித்துள்ளார் ஆனால் எங்களது வளர்ப்பு எங்களை தாய் தந்தையர் நல்லவிதமாக வளர்த்துள்ளனர் அவர் அமெரிக்காவில் படித்துள்ளார் ஆனாலும் நாகரிகமற்று நடந்து கொள்கிறார. மதுரைவிமான நிலையத்தில் குஷ்பூ பேட்டி..

தமிழ்நாட்டில் என்ன வளர்ச்சி உள்ளது வெள்ளேரிக்கு தான் கேட்கிறோம்..

மெட்ரோ திட்டத்திற்கு தெளிவான அறிக்கை தான் கேட்கிறோம்..

இப்போது வரைக்கும் கொடுக்கவில்லை..

மம்தா பானர்ஜி வாக்களிப்பவர்கள் யாருக்கு வாக்களிக்கிறீர்கள் என வீடியோ வைத்திருக்கிறோம் சொல்வது முதலமைச்சர் பேசும் பேச்சா..

மிரட்ட அளவுக்கு தான் உள்ளதா..?

முதலமைச்சர் பேசும் பேச்சை பார்க்கும்போது ஆச்சரியமாக உள்ளது..

எங்களை பார்த்து படிக்காதவர்கள் என்று சொன்னார்கள் அது உண்மைதான் ஆனால் வளர்பு சரியாக உள்ளது..

*பி டி ஆர் பழனிவேல் தியாகராஜனுக்கு பதில் அளித்த குஷ்பூ..*

திமுகவில் இருப்பவர்கள் எங்கிருந்து வந்தவர்கள்.. செந்தில் பாலாஜி உள்ளிட்டோர் எங்கிருந்து வந்தார்கள்.

லண்டன் அமெரிக்கா போன்று நாங்கள் படித்து வரவில்லை.. நாங்கள் 12 ஆவது வகுப்பு வரைதான் படித்திருக்கிறோம்.. வளர்ப்பு சரியாக உள்ளது.

ஜனநாயகம் படம் லீக்?

திரைக்குப் பின்னால் உழைப்பாளிகள் உள்ளனர் அது வீணாவது மிகுந்த கஷ்டம் அளிக்கிறது..

எந்தப் படமாக இருந்தாலும் லீக் பண்ணுபவர்களுக்கு சரியான தண்டனை வழங்க வேண்டும்..

திமுக காங்கிரஸ் இலுக்கமாக உள்ளார்களா?

என் ராகுல் காந்தி,பிரியங்காகாந்திவரவில்லை என முதல்வர் தான் கேட்க வேண்டும்.

அவங்க அப்படி கூறினால் ஊழலை பற்றி புட்டு புட்டு வைத்து விடுவார்கள் அவர்கள்

திமுக ஊழலுக்கு பேர் போனது.

கலைஞர் உருவாக்கிய கட்சி எங்கிருந்து அவர் பார்த்தாலும் வருத்தப்படுவார்.

நீட் காக குரல் கொடுக்கும்திமுக,அதை காங்கிரஸ்தான் கொண்டு வந்தது அப்போது ஏன் அவர்களுடன் கூட்டணி வைக்கிறார்.

சுந்தர் சி சொன்னவுடன் அடிப்படை வேலைகளை செய்கிறார்கள்..

பதில்சொல்லவக்கில்லாமல் தகாத வார்த்தையில் பேசுகிறார்கள்..

.பி.டி.ஆர்என்னைபற்றி விமர்சனம் செய்தார்.*

முப்பதாயிரம் கோடி ஆடியோ வெளியிட்டதற்கு ஏன் நீங்கள் இல்லைஎனஏன் வழக்கு போடவில்லை.

கட்சியிலிருந்து வெளியே வந்ததற்கு எனக்கு சுயமரியாதை முக்கியம்.. உங்களை ஏன் நிதி அமைச்சர் பதவியில் இருந்து தூக்கினார்கள் என தமிழக பாஜக துணைத் தலைவரும் நடிகை குஷ்பு கூறினார்

# பல வருடங்களாக சிசு மரணத்தை மறைத்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்த பெண் மருத்துவர் மீது பொதுமக்கள் குற்றச்சாட்டு

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா தஞ்சாக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரிந்து வரும் பெண் மருத்துவர், அப்பகுதியில்




கடந்த ஏழு ஆண்டுகளாக நடைபெற்ற சிசு மரணங்களை முழுவதுமாக மறைத்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்து உள்ளதாக அப்பகுதியில் உள்ள கிராம பொதுமக்கள் மிகவும் முக்கியமான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர். மேலும் நீலாதேவி மீது அப்பகுதியில் உள்ள கிராம பொதுமக்கள் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர். இவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நம்மை தலைசுற்ற வைக்கும் வண்ணமாகவும், இவர் ஏதும் மன நலம் சார்ந்த பிரச்சனையில் உள்ளாரா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அதிலும் குறிப்பாக இப்பெண் மருத்துவர் தேவைப்பட்டாலும் படாவிட்டாலும் குளுக்கோஸ் போடுவது, பொதுமக்களின் நோட்டுகளை தூக்கி எறிந்து அவமானப்படுத்தி வெளியே போ என்று கத்துவது, தேசிய தர உறுதி தரநிலைகள் சான்றிதழ் பெறசுகாதாரநிலையத்தைசீர்திருத்தம்மேற்கொண்ட மற்றொருஆண்மருத்துவர்மீதுதங்கும்விடுதி சுவரை இடித்ததாக பொய் புகார் பொதுப் பணித்துறை அதிகாரியிடம் கொடுத்தது மற்றும் பணியாளர் எழுதியதுபோல் எழுதி இன்வர்டர் பேட்டரியை காணவில்லை என்று புகார் கொடுத்தது, அதே போல் மற்றொரு புகார் தயார் செய்து உள்ளாட்சிப் பிரதிநிதியை கட்டாயப்படுத்தி கையொப்பம் பெற்று அனுப்பியது,வெளிநோயாளிகள் சிகிச்சைஅறையை தவிர்த்து, பொது அறையில் நோயாளிகள், குறிப்பாக பெண்கள் மருத்துவரிடம் மறைமுகமாக கூற வேண்டிய அறிகுறிகளை அனைவர் முன்னிலையில் கூற வைத்துவிட்டு, வெளி நோயாளிகள் சிகிச்சை அறையில் டிரைவருடன் சேர்ந்து உணவு அருந்துவதற்கு மட்டும் பயன்படுத்துவது, தான் சொல்வதைகேட்காதபணியாளர்களைபொதுமக்கள் முன்னிலையில் வசைபாடி அவமானப்படுத்துவது, சிசுவை பறிகொடுத்து கண்ணீரில் தத்தளிக்கும் பணியாளரிடம், "எனக்கு செய்த துரோகத்தால் தான் நீபிள்ளையைபறிகொடுத்துவிட்டாய்",என்றுசபிப்பது, வருகைப் பதிவேடை பூட்டி வைத்துவிட்டு,பின்னர் பல நாட்களுக்கும் சேர்த்து வருகை பதிவை செய்து கொள்வது,உயர் அதிகாரிகளை மதிக்காமல்,எனக்கு சென்னை தலைமைச் செயலகத்தில் சொந்தக்காரர் இருக்கிறார் என்று மிரட்டி, பொய் பழிகளை சுமத்தி புகார் அளிப்பது, நேயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளிக்காமல், வீண் விவாதங்களையும் கிசுகிசுகளையும் பரப்புவது, மகளிர் சுகாதார தன்னார்வலரை பணி செய்ய விடாமல் தடுப்பது என்று இவர் மீதான குற்றச்சாட்டுகளின் லிஸ்ட் பெரிதாக போய்கொண்டே இருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒவ்வொரு சிசுவின் மரணத்திற்கான காரணத்தை கண்டறிந்து, பிற்காலத்தில்அம்மாதிரியானமரணங்கள்நிகழாமல் தடுக்கும் நடவடிக்கைகளை அரசு எடுக்க முடியாமல் செய்துசிசுமரணத்தைமறைத்துசமுதாயச்சீர்கேட்டை ஏற்படுத்தும் இப்பெண் மருத்துவரை என்னவென்று சொல்வது என அப்பகுதி கிராம பொதுமக்கள் கண்ணீருடன் வேதனை தெரிவித்தனர்.

எனவே பெண் மருத்துவர்,டிரைவர்,கிராம சுகாதார செவிலியர் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் மீதுதான குற்றச்சாட்டுகள் குறித்து மாவட்ட ஆட்சியர் உரிய மற்றும் துரித கடும் நடவடிக்கை மேற்கொள்ளவும்,தஞ்சாக்கூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வேறு ஏதேனும் பெரும் அசம்பாவிதங்கள் நடந்து விடாமல் தடுக்க, சுற்று வட்டாரப் பகுதி பொதுமக்கள் சார்பாக மனு அளிக்கப்பட்டுள்ளது.தேர்தல் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருவதால் இவ்விவகாரம் தொடர்பாக மாவட்டநிர்வாகம்,சுகாதாரத்துறைதுரிதநடவடிக்கை மேற்கொள்ளுமாஎன்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# சென்னையில் ரூ.52.33 லட்சம் மதிப்பிலான தங்க கட்டிகள் பறிமுதல்




சென்னை: சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில், உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு வரப்பட்ட ரூ.52.33 லட்சம் மதிப்பிலான தங்க கட்டிகள், பணம் சிக்கியது.

சென்னை ரயில்வே கோட்ட முதுநிலை கோட்ட பாதுகாப்பு ஆணையர் வல்லேஸ்வர பாபுஜி உத்தரவின் பேரில், சென்ட்ரல் ஆர்பிஎஃப் காவல் ஆய்வாளர் மதுசூதனரெட்டி மேற்பார்வையில் ஆர்பிஎஃப் போலீஸார் மற்றும் தேர்தல் பறக்கும் படையினர் ஆகியோர் நேற்று மதியம் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.அப்போது,கோயம்புத்தூரில் இருந்து சென்னை சென்ட்ரலுக்கு விரைவு ரயில் வந்தது. அதில் இறங்கி வந்த பயணிகளில், ஒருவர் மீது சந்தேகம் ஏற்பட்டது.

அவரை தடுத்து நிறுத்தி, அவரது பைகளை சோதித்தபோது, அதில் ரூ.44,83,257 மதிப்பிலான 4 தங்ககட்டிகள் மற்றும் ரூ.7.50 லட்சம் ரொக்கம் இருந்தது. இதற்கான ஆவணங்களை அவர் சமர்ப்பிக்கவில்லை. இதுகுறித்து விசாரித்த போது, அந்தநபர் சேலத்தைச் சேர்ந்த பத்மநாபன் ஜெயராஜ் (43) என்பதும், வியாபாரத்துக்காகதங்கக்கட்டிகள்,பணத்தைஎடுத்து வந்ததும் தெரியவந்தது.



ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளர், ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர சு.முத்துசாமி அவர்களுக்கு, காங்கிரஸ் மூத்த தலைவர், முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் சூரம்பட்டி பகுதி சூரம்பட்டி பஸ் ஸ்டாப் பகுதியில் 14042026 அன்று மாலை பரப்புரை செய்து உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், கழக மாநில, மாவட்ட, மாநகர,பகுதி, வார்டு கழகம், சார்பு அணிகள் நிர்வாகிகள், BLA2, BLC, BDA, நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.



ஈரோடு மாவட்டம், பவானி அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (15.04.2026) மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 வாக்குப்பதிவு நாளான 23.04.2026 அன்று வாக்குச்சாவடிகளில் பணியாற்றவுள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்கள் ஆகியோர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் 2 ஆம் கட்ட பயிற்சி வகுப்பினை ஆய்வு மேற்கொண்டு பயிற்சி குறித்து கலந்துரையாடினார்.

# தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் அலுவலகத்திற்கு வருகை தந்து வாக்கு சேகரிப்பு









ஈரோடு கிழக்கு சட்டமன்றதொகுதி காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் , அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகவேட்பாளர்மனோகரன், ஈரோடு மேற்கு சட்டமன்ற தமிழக வெற்றி கழக வேட்பாளர் ஆனந்த் மோகன்,

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தமிழக வெற்றி கழகவேட்பாளர்பாலாஜி ஆகியோர் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் அலுவலகத்திற்கு வருகை தந்து வாக்கு சேகரித்த பொழுது, அனைத்து வேட்பாளர்களையும் வரவேற்று மரியாதை செய்து, வாக்கு சேகரிப்புக்கு வழிவகை செய்து,தொழில் சார்ந்த கோரிக்கை மனுக்கள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில தலைவர் எல் கே.எம்.சுரேஷ், மாநில பொருளாளர் சித்தோடு கே.பாலசுப்பிரமணியம், இணைச் செயலாளர் லக்காபுரம் பாலசுப்பிரமணியம்

மற்றும் ஈரோடு விசைத்தறி உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் ராசு என்கின்ற பழனிசாமி , பொருளாளர் செல்லாராம் மணி , இணை பொருளாளர் விஸ்வநாதன்,துணைத்தலைவர் ஜெகநாதன்,துணைச் செயலாளர் நவீன் பூபதி ,செய்தி தொடர்பாளர் சுரேஷ் ,இணை செய்தி தொடர்பாளர் தர்மலிங்கம் ,இணை ஒருங்கிணைப்பாளர் தியாகு ,வீரப்பன் சத்திரம் விசைத்தறி உரிமையாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் ஞான முருகன் ராஜா,& எல் என்.சி.சந்திரன் மற்றும் ஈரோடு விசைத்தறி உரிமையாளர்கள் சங்க செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# விஜய் பிரச்சாரம்: கூட்ட நெரிசலில் சிக்கி வேட்பாளர் உட்பட 30 பேர் மயக்கம்

கோயம்புத்தூர்: கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்டங்களில் விஜய் நடத்திய ரோடு ஷோ மற்றும் பிரச்சார கூட்டத்தில் வேட்பாளர் உட்பட 30க்கும் மேற்பட்டோர் மயக்கமடைந்தனர்.

திருப்பூர் மாவட்டத்தில் பிரச்சாரம் செய்வதற்காக சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் கோயம்புத்தூர் விமான நிலையத்திற்கு தவெக தலைவர் விஜய் நேற்று மதியம் 2 மணிக்கு வந்து சேர்ந்தார். பின்னர் பிரச்சார வேனில் திருப்பூரை நோக்கி புறப்பட்டார்.

கோயம்புத்தூர் விமான நிலையத்தில் 1000க்கும் மேற்பட்ட தவெக தொண்டர்கள் குவிந்திருந்த நிலையில், சின்னியம்பாளையம், நீலம்பூர் என்று வழிநெடுக ஆயிரக்கணக்கான தொண்டர்கள் குவிந்து விஜய்க்கு வரவேற்பு அளித்தனர். மேலும் பல கட்சி தொண்டர்கள், விஜய் சென்ற வாகனத்தை தங்களது இருசக்கர வாகனத்தில் பின் தொடர்ந்தனர். கணியூர் சுங்கச்சாவடி அருகே சூலூர் தொகுதியில் போட்டியிடும் தவெக வேட்பாளர் சுகுமாரன், 1000-க்கும் மேற்பட்ட தொண்டர்களுடன் காலை 11 மணியில் இருந்து விஜய்க்காக காத்திருந்தார். விஜய் அங்கு வருகை தந்த போது, அவரை பார்க்க தொண்டர்கள் முண்டியடித்தனர். அப்போது அந்த நெரிசலில் சிக்கிய வேட்பாளர் சுகுமாரன் மயக்கமடைந்தார். இதையடுத்து, அவரை கட்சியினர் மீட்டு, முகத்தில் தண்ணீர் தெளித்து ஆசுவாசப்படுத்தினர்.



மதச்சார்பற்ற இந்தியா கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் சூரம்பட்டி பகுதி 30 , 49 வது வார்டுக்கு உட்பட்ட பகுதிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு கழக நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.



ஈரோடு மாவட்டம், பவானி அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நேற்று (15.04.2026) மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 வாக்குப்பதிவு நாளான 23.04.2026 அன்று வாக்குச்சாவடிகளில் பணியாற்றவுள்ள அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்களுக்கான தபால் வாக்கு செலுத்தும் வசதி மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.





கிறிஸ்தவ நல அமைப்பு ஈரோடு மாவட்ட நிர்வாகிகள் கலந்தாய்வு சந்திப்பில் C.S.I பொதுசெயலாளர் வழக்கறிஞர் (தமிழக சிறுபான்மை மேம்பாட்டு கழகம்) பெர்ணான்ட்ஸ் ரத்தின ராஜா அவர்கள் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி ஈரோடு மேற்கு சட்டமன்ற வேட்பாளர் சு.முத்துசாமி , ஈரோடு கிழக்கு சட்டமன்ற காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன், மொடக்குறிச்சி சட்டமன்ற திமுக வேட்பாளர் செந்தில்நாதன் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து சிறப்புறை ஆற்றினார்.

# சென்னை அருகே மீஞ்சூரில் கல்லூரி மாணவிக்கு சரமாரி வெட்டு இளைஞர் கைது, இருவருக்கு வலைவீச்சு

சென்னை: சென்னையை அடுத்த மீஞ்சூரில் கல்லூரி மாணவியை வெட்டி கொலை செய்ய முயன்ற கும்பலை போலீஸார் தீவிரமாக தேடி வருகின்றனர். மாடியில் மாணவி தேர்வுக்காக படித்து கொண்டிருந்தபோது பக்கத்து வீட்டு மாடி வழியாக வந்த கஞ்சா போதை நபர்கள், அந்த மாணவியை வெட்டி விட்டு தப்பி ஓடிய நிலையில், அதில் ஒருவர் மட்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூரை அடுத்த வல்லூர் ஊராட்சிக்கு உட்பட்ட வாலாஜா மகூதி தெருவில் வசித்து வருபவர் முகமது அஸ்கர். இவருக்கு சல்மா என்ற மனைவியும், இரு பிள்ளைகளும் உள்ளனர். இவரது மகள் சுமையா ஃபாத்திமா (18) தனியார் கல்லூரி ஒன்றில் முதலாம் ஆண்டு படித்து வருகிறார்.

தற்போது கல்லூரி செமஸ்டர் தேர்வு நடைபெற்று வரும் நிலையில், மாணவி ஃபாத்திமா தேர்வுக்காக தயாராகி கொண்டிருந்தார். நேற்று இரவு இந்த மாணவி




தனது வீட்டு மாடியில் உள்ள அறையில் தனியாக படித்து கொண்டிருந்த நிலையில், மூன்று இளைஞர்கள் கஞ்சா போதையில் ஃபாத்திமா வீட்டு பின்புறம் உள்ள முட்புதர் வழியாக பக்கத்து வீட்டு மாடி வழியாக ஏறி ஃபாத்திமா வீட்டு மாடியில் குதித்தனர். பின்னர் கஞ்சா போதையில் இருந்த மூன்று இளைஞர்கள், ஃபாத்திமா அறையில் புகுந்து அவரை பாலியல் வன்கொடுமை செய்ய முயன்றதாக கூறப்படுகிறது. அப்போது, மாணவி ஃபாத்திமா கூச்சலிடவே ஆத்திரமடைந்த போதை இளைஞர்கள் கத்தியால் ஃபாத்திமாவை கை,கால், தலை உள்ளிட்ட பகுதிகளில் சரமாரியாக வெட்டி விட்டு தப்பி ஓட முயன்றுள்ளனர்.

அப்போது, ஃபாத்திமா அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த பெற்றோர் மற்றும் அக்கம்பக்கத்தினர், தப்பி ஓட முயன்ற மூவரில் ஒருவரை மட்டும் விரட்டிச் சென்று பிடித்து அடித்து, மீஞ்சூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். பின்னர், பாதிக்கப்பட்ட மாணவியை மீட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட மாணவி ஃபாத்திமாவுக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்த மீஞ்சூர் போலீஸார், கைது செய்யப்பட்ட இளைஞர் டில்லி பாபுவிடம் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், தப்பி ஓடியவர்களை தனிப்படை அமைத்து போலீஸார் தீவிரமாக தேடி வருகின்றனர். இதனிடையே, கைது செய்யப்பட்ட இளைஞர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அதே பகுதியில் வசிக்கும் இளைஞர் சிலருடன் சேர்ந்து கத்தி உள்ளிட்ட ஆயுதங்களுடன் ரீல்ஸ் பதிவிட்டு வந்ததும், மேலும் அப்பகுதி மக்களை அச்சுறுத்தும் வகையிலான செயலில் ஈடுபட்டு வந்ததும் விசாரணையில் தெரியவந்தது. சென்னை அடுத்த மீஞ்சூரில் மாடியில் தேர்வுக்காக படித்து கொண்டிருந்த மாணவி ஒருவரை கஞ்சா போதை கும்பல் எந்தக் காரணமும் இல்லாமல் வெட்டிக் கொலை செய்ய முயன்ற சம்பவம் பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.





டாக்டர் சட்டமேதை அம்பேத்கர் 135 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி பெரியார் நகர் அமைச்சர் முகாம் அலுவலகத்தில் அமைக்கப்பட்ட அவரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.அதன் பிறகு அடுத்த நிகழ்வாக பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள அவரது முழு உருவ சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் திமுக துணைப் பொதுச்செயலாளர் அந்தியூர் ப. செல்வராஜ் ,ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் மற்றும் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் செந்தில்நாதன் ,ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் மற்றும் திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் மாவட்ட புதுப்பாளையம் பகுதியில் சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் வி.பி.பிரபு அப்பகுதியில் உள்ள ஹோட்டல் கடையில் கொத்து புரோட்டா சமைத்துக் கொடுத்து வாக்கு சேகரித்தார். அப்போது, " அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் ஒவ்வொரு அட்டைதாரருக்கும் ஒரு பத்தாயிரம் வழங்கப்படும். அத்திக்கடவு அவிநாசி திட்டம் முழு வீச்சில் நடைபெறும்" எனவும் கூறி வாக்குசேகரிப்பில் ஈடுபட்டார்.



ஈரோடு மாவட்டம் பர்கூர் மேற்கு மலை, பெரியூர், பட்டேபாளையம்,எஸ்.டி.தெரு, கோயில்நத்தம், ஒசூர் பகுதிகளில் அந்தியூர் தொகுதி திமுக வேட்பாளர் சிவபாலன், உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு கோரி வாக்கு சேகரித்தார். அப்போது சிவபாலனுக்கு பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர். ஐந்தாண்டு கால திமுகவின் சாதனைகளை எடுத்து கூறி சிவபாலன் வாக்குசேகரித்தார். இந்நிகழ்வின் போது அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி வெங்கடாஜலம் உட்பட பலர் இருந்தனர்.



ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிபாளையம் திமுக வேட்பாளர் நல்லசிவம் மலையம்பாளையம் பகுதிகளில் தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்தார். திமுக ஆட்சியில் பெண்களுக்காக நிறைவேற்றப்பட்ட நலத்திட்டங்களை விளக்கி அவர் வாக்கு சேகரித்தார். எம்மாம்பூண்டி உள்ளிட்ட கிராமங்களில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் திமுக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணியின் ஈரோடு கிழக்கு தொகுதி வேட்பாளர் கோபிநாத் பழனியப்பனுக்கு ஆதரவாக கர்நாடக மாநில துணை முதல்வர் டி.கே. சிவகுமார் ஈரோட்டில் சூறாவளி பிரசாரம் மேற்கொண்டார்

ஈரோடு சம்பத் நகர் - நசியனூர் சாலை சந்திப்பில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான தொண்டர்களிடையே



திறந்த வாகனத்தில் நின்றபடி 'கை' சின்னத்திற்கு வாக்கு சேகரித்த அவர் ஆற்றிய உரையின் சுருக்கம்

மறைந்த முன்னாள் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கு அஞ்சலி செலுத்தினர். எனது இனிய நண்பரும், எளிமை மற்றும் நேர்மையின் அடையாளமுமான ஈரோட்டின் மூத்த தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களின் மறைவு நமக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

அவரைப் போலவே இன்று களமிறங்கியுள்ள கோபிநாத் பழனியப்பன் இந்த மண்ணின் மைந்தன்; துடிப்பான இளைஞர். அவர் சட்டமன்ற உறுப்பினரானால் இந்தத் தொகுதிக்கு பல சாதனைகளைச் செய்வார்."

திமுக 75 ஆண்டுகால பாரம்பரியமிக்க கட்சி. மறைந்த மாபெரும் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி எனும் ஆலமரத்தின் நிழலில் இன்று தமிழகம் சிறப்பாக ஆட்சி செய்யப்பட்டு வருகிறது. அதேபோல், 141 ஆண்டுகால நீண்ட வரலாற்றைக் கொண்ட காங்கிரஸ் கட்சி, இந்த நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்ததுடன், ஏழை இந்தியாவை வளமான இந்தியாவாக மாற்றியது. ஆனால், இன்று பாசிச பாஜகவின் பிடியில் சிக்கி நாடு தடுமாறி வருகிறது.

2021 முதல் 2026 வரையிலான தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சி, ஒரு பொற்கால ஆட்சி. இந்த 'திராவிட மாடல் 2.0' சிறப்பாகத் தொடரவும், தமிழகம் முழுக்க மதச்சார்பற்ற கூட்டணி மாபெரும் வெற்றி பெறவும் மக்கள் கை சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும்.

சினிமா பின்னணியில் இருந்து அரசியலுக்கு வருபவர்களைச் சாடிய அவர், "இன்று ஒருவர் 'நான்தான் எம்ஜிஆர்' என்று சினிமா கவர்ச்சியை வைத்து அரசியல் செய்கிறார். எம்ஜிஆர் என்பவர் ஒருவர்தான்; அவரைப் போல நடிக்கலாமே தவிர, அவர் ஆக முடியாது. அடிப்படை அரசியல் ஞானம் இல்லாமல் சினிமா பாணியில் பேசுபவர்களிடம் இளைஞர்கள் ஏமாந்துவிட வேண்டாம். தலைவனைத்திரையில் பார்க்காதீர்கள்; தரையில் (களத்தில்) பாருங்கள்," என்று ஆவேசமாக உரையாற்றினார்.

இந்தப் பிரசாரத்தின்போது திமுக, காங்கிரஸ் மற்றும் மதசார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் உடனிருந்தனர்.


## தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு

## மாற்றுத்திறனாளிகள் நலனை கருத்தில் கொண்டு சைகை மொழி பெயர்ப்பாளரை தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் நியமிக்கப்பட்டுள்ளது

### கலெக்டர் கந்தசாமி தகவல்

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகள் நலனை கருத்தில் கொண்டு சைகை மொழி பெயர்ப்பாளரை தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் நியமிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி குறிப்பிட்டுள்ளதாவது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகள் 100 சதவீதம் வாக்களிக்க வாக்கு பதிவு நாளன்று மாற்றுத்திறனாளிகள், குறிப்பாக செவித்திறன் குறையுடைய மற்றும் வாய் பேச இயலாத மாற்றுத்திறனாளிகள் ஏதேனும் கோரிக்கை தொடர்பாக அழைத்திட மாவட்ட ஆட்சியர் அலுவலக தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் சைகைமொழி பெயர்ப்பாளர் ஒருவரை நியமிக்கப்பட்டுள்ளது. செவித்திறன் குறையுடைய மற்றும் வாய் பேச இயலாத மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளுக்கு Video Call மூலம் தகவல்கள் வழங்கப்பட உள்ளது. வாக்குப்பதிவு நாளன்று மாற்றுத்திறனாளிகள் தேர்தல் கட்டுப்பாட்டு



அறையில் 9499933475 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தங்கள் கோரிக்கை குறித்து தெரிவிக்கலாம் என ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

## Is Trump's plan to block Strait of Hormuz working out? What we know about the US blockade

*As the fragile two-week truce between the United States and Iran holds, Washington has stated that it has successfully implemented its blockade of the Strait of Hormuz. In a statement issued on Tuesday, US Central Command Commander Admiral Brad Cooper stated that the blockade has been "successfully implemented."*

*However, this statement comes amid reports of three ships transiting through the key strait, which controls around 20 per cent of the world's oil and gas supply.*

*With reports of ships passing through Hormuz, and US stating its blockade has been successful, the question is - has Trump's plan really impacted Iran? and how successful has it been?*



*US says blockade 'fully implemented' As per CENTCOM, US forces have halted Iran's economic trade with its blockade in the Hormuz strait. "An estimated 90% of Iran's economy is fueled by international trade by sea. In less than 36 hours since the blockade was implemented, U.S. forces have completely halted economic trade going into and out of Iran by sea," said Admiral Cooper. The US military has also stated that no ships have made it past the strait after Washington implemented its blockade. CENTCOM added that six merchant vessels, which were leaving Iranian ports, were asked to turn around and re-enter ports from the Gulf of Oman. "The blockade is being enforced impartially against vessels of all nations entering or departing Iranian ports and coastal areas, including all Iranian ports on the Arabian Gulf and Gulf of Oman," CENTCOM added further.*

*"successful," maritime intelligence shows that at least two vessels transited through the Strait of Hormuz on the first day of the Trump-ordered blockade. One of these vessels was Chinese-flagged tanker Rich Starry, which has also been sanctioned by the US.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.